
# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 வைகாசி 06 செவ்வாய்க்கிழமை 20.05.2025 கதிர் 200



யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு -
யாழ் முற்றம்
Yarl Muttram
Youtube Channel

# மொட்டுக் கட்சியின் போர் வீரர்கள் தின நிகழ்வு மஹிந்த, கோட்டா தலைமையில் பலர் பங்கேற்பு





கொழும்பு, மே 20

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் ஏற்பாட்டில் போர் வீரர்கள் நினைவு தின நிகழ்வு நாடாளுமன்ற மைதானத்துக்கு அருகே அமைந்துள்ள போர் வீரர் நினைவுச் சின்னத்துக்கு அருகில் இன்று காலை நடைபெற்றது.

முன்னாள் ஜனாதிபதிகளான மஹிந்த ராஜபக்ஷ, கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோரின் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ மற்றும் பிற கட்சி உறுப்பினர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபகஷ, "இன்று நாங்கள் கடமையை 7

## துப்பாக்கிச்சூடுகளால் அதிரும் இலங்கை

# கொலைகளைத் தடுக்க தவறிவிட்டது அநுர அரசு

## நாடாளுமன்றில் சஜித் குற்றச்சாட்டு



கொழும்பு, மே 20

"கடந்த 8 மாதங்களில் இலங்கையின் பல்வேறு பகுதிகளில் 79 துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. இதில் 52 பேர் உயிரிழந்துள்ளனர். தொடர்ந்து நடைபெறும் இந்த வன்முறைகள், கொலைகள் மற்றும் அச்சுறுத்தல்களைத்தடுக்க அநுர அரசு தவறிவிட்டது."

- என்று நாடாளுமன்றத்தில் இன்று எதிர்க்கட்சித்தலைவர் சஜித்பிரேமதாஸ தெரிவித்தார். நிலையியற் கட்டளை 27 (2) இன் கீழ் கேள்விகளை எழுப்பிய அவர், அரசின் செயற்பாடுகள் தொடர்பில் பின்வரும் முக்கிய விடயங்களை முன்வைத்தார்.

துப்பாக்கிச்சூடுகள் தொடர்பில் அரசின் திட்டம் எங்கே?

நாட்டளவில் இடம்பெறும் துப்பாக்கிச்சூடுகள் மற்றும் அச்சுறுத்தல்களுக்கு எதிரான அரசின் தற்போதைய வேலைத்திட்டம் போதுமானதா என்பதையும், அது இல்லை என்றால், தடுப்பதற்கான புதிய திட்டத்தைச் சபையில் முன்வைக்குமாறும் கேள்வி எழுப்பப் பட்டது. 7

## டிப்பர் மீது துப்பாக்கிச்சூடு!

### சாரதி உட்பட இருவர் தப்பியோட்டம்

யாழ்ப்பாணம், மே 20

யாழ். கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வரணிப் பகுதியில் சட்டவிரோத மணலுடன் தப்பியோடிய டிப்பர் வாகனம் மீது துப்பாக்கிச்சூடு நடத்தி கொடிகாமம் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இந்தச் சம்பவம் இன்று 7




## வைத்தியர் முகைதீன் கொலை: புளொட் நெடுமாறன் விடுதலை

வவுனியா, மே 20

வவுனியாவில் வைத்தியர் முகைதீனைச் சுட்டுப் படுகொலை செய்த சம்பவத்துடன் தொர்புடைய நெடுமாறன் என்று அழைக்கப்படும் சிவநாதன் பிரேமநாத் என்பவருக்கு வவுனியா மேல் நீதிமன்றம் மரணதண்டனை வழங்கிய நிலையில் மேன்முறையீட்டு நீதிமன்றம் அந்தத் தண்டனையை மாற்றி அவரை விடுதலை செய்து உத்தரவிட்டது.

மேன்முறையீட்டு 7



## காட்டு யானை தாக்கி ஆண் ஒருவர் மரணம்



வவுனியா, மே 20

வவுனியா, செட்டிகுளம், கன்னாட்டி - கணேசபுரம் பகுதியில் காட்டு யானை தாக்கியதில் ஆண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று இரவு அவரின் வீட்டில் இருந்து அருகில் உள்ள கடைக்குச் சென்றபோது 7

## எதிர்க்கட்சித் தலைவர்கள் நேரில் சந்தித்து தேசிய பாதுகாப்பின் வீழ்ச்சி குறித்து பேச்சு



கொழும்பு, மே 20

நாளுக்கு நாள் மோசமடைந்து வரும் தேசிய பாதுகாப்பின் வீழ்ச்சி குறித்து எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில், எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கிடையிலான விசேட கலந்துரையாடல் இன்று செவ்வாய்க்கிழமை காலை நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்றது. 7

# குஷ் போதைப்பொருளுடன் பெண்கள் மூவர் கைது!

கொழும்பு, மே .20

120 மில்லியன் ரூபாய் பெறுமதியான குஷ் போதைப்பொருளுடன் இலங்கை பெண்கள் மூவர் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து சுங்க அதிகாரிகளால்கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நேற்று(19)இரவுஇந்தகைதுநடவடிக்கை இடம்பெற்றுள்ளது. கொலன்னாவை பகுதியைச் சேர்ந்த 46 வயதுடைய தாய், அவரது 18 வயதுடைய மகள், வெள்ளம்பிட்டி பகுதியைச் சேர்ந்த 56 வயதுடைய வர்த்தகப்பெண் ஒருவருமே இவ்வாறு கைதுசெய்யப்பட்டனர். சந்தேகநபர்கள் குறித்த போதைப்பொருள் தொகையை தாய்லாந்தில் இருந்து வாங்கி, காற்றுச்சீரமைப்பு மற்றும் மின்சார உணவு தயாரிப்பு உபகரணங்கள் 7இல் நுணுக்கமாக மறைத்து, இந்தியாவின் சென்னை நகருக்கு வந்து, பின்னர் அங்கிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வந்துள்ளதாக சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

அத்துடன் இந்த மூன்று பெண்களும் இதற்கு முன்பும் பல தடவைகள் இவ்வாறு மின்சார உபகரணங்களை எடுத்து வந்துள்ளதை சுங்க அதிகாரிகள் கண்டறிந்துள்ளனர். கைப்பற்றப்பட்ட போதைப்பொருள் தொகையுடன், அவற்றை எடுத்து வந்த மூன்று பெண்களும் மேலதிக விசாரணைகளுக்காக கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் பிரிவு அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மது போதையில் பேருந்தை செலுத்திய சாரதி கைது!

கொழும்பு, மே .20

மது போதையில் பேருந்தை செலுத்திய சாரதி ஒருவர் கட்டுபோத்த பொலிஸ் நிலையத்தின் போக்குவரத்து பிரிவு அதிகாரிகளால், கட்டுபோத்த நகரில் வைத்து கைது செய்யப்பட்டார்.

நேற்று (19) மதியம் இந்த கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

கட்டுபோத்த, ரதலியகொட பகுதியைச் சேர்ந்த 52 வயதுடைய நபரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டார்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவது,

கட்டுப்பொத்த பகுதியில் நேற்று (19) பிற்பகல் பாடசாலை மாணவர்களை ஏற்றிச் சென்ற பாடசாலை பஸ் ஒன்றை பொலிஸ் நிலைய போக்குவரத்து பிரிவு அதிகாரிகள் சோதனையிட்டனர்.

பேருந்தில் 16 பாடசாலை மாணவர்களும், இரண்டு தாய்மார்களும் பயணித்துக் கொண்டிருந்தனர்.

சாரதி மது போதையில் இருப்பது கண்டறியப்பட்டு, பின்னர் அவர் கைது செய்யப்பட்துடன், குறித்த பேருந்தும் பொலிஸ் காவலில் எடுக்கப்பட்டது.

சந்தேக நபர் இன்று (20) நாரம்மல நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளார்.

# 5ஆம் வகுப்பு மாணவர்களை கொடூரமாகத் தாக்கிய அதிபரான பௌத்த துறவி!

அம்பாறையில்உள்ள அரசபாடசாலைஒன்றில் தரம்5இல் கல்வி பயிலும்ஒன்பது மாணவர்களை முழங்காலில்நிற்கவைத்து,பாடசாலை அதிபரான பௌத்த துறவி கொடூரமாகத் தாக்கிய சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவது,

பாடசாலையில் கடந்த 15 ஆம் திகதி அன்று பாடசாலை நேரத்திற்கு பின்னர் பிரத்தியேக வகுப்புகள் நடைபெற்றுள்ளது.

இதன்போது அன்றையதினம்குழந்தைகளுக்கு வழங்கப்பட்ட இடைவேளையின் போது கழிப்பறைக்குச்சென்றபல குழந்தைகள் தண்ணீர் விசிறியடித்து விளையாட்டில் ஈடுபட்டதாக வகுப்பு ஆசிரியரால் பாடசாலை அதிபருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, மறுநாள் 16 ஆம் திகதி அன்று 3.00 மணியளவில், பாடசாலை அதிபர் மூன்று பிரம்புகளை எடுத்து, ஒன்பது மாணவர்களையும் வரவழைத்து முழங்காலில் நிற்க வைத்து, அவர்களின் கைகளைச் சுவரில் வைக்கச் செய்து, மாணவர்களின் முதுகில் கொடூரமாகத் தாக்கியுள்ளார்.

வீடு திரும்பிய பாதிக்கப்பட்ட பிள்ளைகள் நடந்த சம்பவத்தை பெற்றோரிடம் தெரிவித்துள்ளனர். பெற்றோர்கள் பிள்ளைகளை பரிசோதித்தபோது அடிபட்டதால் ஏற்பட்ட வீக்கம் மற்றும் வலியுடன் கூடிய காயங்களும் இருப்பது கண்டறியப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பாக பெற்றோர்கள் கல்வி அலுவலகத்தில் முறைப்பாடு செய்யத் தயாராக இருந்தபோது, பாடசாலை அபிவிருத்தி சங்கத்தைச்சேர்ந்த பெற்றோர் குழு, தாக்குதலால் பாதிக்கப்பட்ட மாணவர்களின் பெற்றோரை சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டாம் என அழுத்தம் கொடுத்தது.

எனினும் இந்த சம்பவம் தொடர்பாக பெற்றோர்கள் இன்றையதினம் சிறுவர் மறுவாழ்வு மையம், அம்பாறை வலயக் கல்விப் பணிப்பாளர் மற்றும் அம்பாறை மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோரிடம் இந்த பிள்ளைகள் மீதான தாக்குதல்கள் குறித்து எழுத்துப்பூர்வமாக முறைப்பாடுகளை பதிவு செய்துள்ளனர்.

அதேவேளை, அம்பாறை வலயக் கல்விப் பணிப்பாளர் இத்தாக்குதல் குறித்து கல்வி அலுவலகம் உடனடியாக விசாரணையைத் தொடங்கும் எனத் தெரிவித்தார்.



# மாணவி அம்ஷிகா தற்கொலை விவகாரம்- பாடசாலை அதிபருக்கு இடமாற்றம்!

கொழும்பு, மே .20

கொழும்பு இராமநாதன் இந்து மகளீர் கல்லூரியின் அதிபர் கல்வி அமைச்சுக்கு இட மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பிலுள்ள குறித்த பிரபல பாடசாலையில் கல்வி பயின்றுவந்த 16 வயதுடைய மாணவி அம்ஷிகா தற்கொலை செய்துகொண்ட சம்பவம் தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வரும் நிலையில், இந்த இடமாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி குறித்த பாடசாலைக்கு தற்போது புதிய அதிபர் ஒருவர் கடந்த வெள்ளிக்கிழமை முதல் நியமிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு குறித்த மாணவி கொழும்பு இராமநாதன் இந்து மகளீர் கல்லூரியில் கல்வி பயின்ற வேளையில், அந்தப் பாடசாலையின் கணித ஆசிரியரால் துஷ்பிரயோகம் செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக நடைபெற்று வரும் விசாரணையின் அடிப்படையில் அதிபர் அமைச்சுக்கு மாற்றப்பட்டுள்ளார்.

சம்பவத்துடன் தொடர்புடைய ஆசிரியர் கைது செய்யப்பட்டு பின்னர் பிணையில் விடுதலை செய்யப்பட்டிருந்தார்.

ஆசிரியரால் துஷ்பிரயோகத்துக்குள்ளான சம்பவம் தொடர்பில் ஏற்பட்ட மனஅழுத்தம் காரணமாக பாதிக்கப்பட்ட மாணவி அண்மையில் உயரமான கட்டிடம் ஒன்றில் இருந்து குதித்து தற்கொலை செய்துகொண்டார்.

இந்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்த நிலையில், மாணவிக்கு நீதி கோரி போராட்டங்கள் நடாத்தப்பட்டது.

மாணவியின் மரணம் தொடர்பில் தற்போது விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதுடன், விசாரணைகளை மேற்கொள்ள மூன்று பேர் கொண்ட விசாரணைக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

எனினும் தற்போது விசாரணைகள் ஜூன் 23ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளதுடன், சம்பவத்துடன் தொடர்புடைய ஆசிரியரும் இப்போது கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்டுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## 6 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாயம்!

கொழும்பு, மே 20

நாட்டின் சில பகுதிகளில் தொடர்ந்து கனமழை பெய்து வருவதால், ஆறு மாவட்டங்களில் பல பகுதிகளுக்கு முன்கூட்டியே மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இந்த மண் சரிவு எச்சரிக்கை நாளை புதன்கிழமை பிற்பகல் 2 மணி வரை அமுலில் இருக்கும் என்று தேசிய கட்டடம் மற்றும் ஆராய்ச்சி நிலையம் தெரிவித்துள்ளது.

அதன்படி, கொழும்பு, காலி, களுத்துறை, கண்டி, கேகாலை மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களில் உள்ள பல பிரதேச செயலக பிரிவுகள் மற்றும் அதனை அண்டிய பகுதிகளுக்கு மஞ்சள் நிற 1 முதலாம் நிலை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பு: - சீதாவாக்கை பிரதேச செயலகப் பிரிவுகள் மற்றும் அதனை அண்டிய பகுதிகள்

காலி:- எல்பிட்டிய பிரதேச செயலகப் பிரிவுகள் மற்றும் அதனை அண்டிய பகுதிகள்

களுத்துறை:- பாலிந்தநுவர மற்றும் இங்கிரிய பிரதேச செயலகப் பிரிவுகள் மற்றும் அதனை அண்டிய பகுதிகள்

கண்டி:- பஸ்பாகே கோரளை பிரதேச செயலகப் பிரிவுகள் மற்றும் அதனை அண்டிய பகுதிகள்

கேகாலை:- புலத்கோ/ஹபிட்டிய, ருவன்வெல்ல, தெஹியோவிட்ட மற்றும் வரக்காபொல பிரதேச செயலகப் பிரிவுகள் மற்றும் அதனை அண்டிய பகுதிகள்

இரத்தினபுரி:- எஹலியகொட, கிரியெல்ல, நிவித்திகல, கலவான, இரத்தினபுரி மற்றும் குருவிட்ட மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகள்

## நீர் விநியோக செயற்திட்டம் ஆரம்பம்



வடமராட்சி, மே .20

வடமராட்சி கிழக்கு தாளையடி நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் இருந்து கரவெட்டிக்கு நீர் விநியோகம் திங்கட்கிழமை (19) ஆரம்பித்து வைக்கப்பட்டது.

கரவெட்டி மத்தொனி தாழங்குழியில் அமைக்கப்பட்ட நீர் தாங்கியின் இருந்து நீர் வழங்கும் நிகழ்வில் பிராந்திய பொறியியலாளர் உதயசீலன், யாழ். மாவட்ட பொறுப்பதிகாரி யசோதரன், பருத்தித்துறை நீர் வழங்கல் சபை பொறுப்பாளர் மதிவாணன், கரவெட்டி அபிவிருத்தி ஒன்றியம் தலைவர் இராகவன், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டு நீர் விநியோக செயற்பாட்டை ஆரம்பித்து வைத்தனர்.

யாழ்ப்பாணம் - தாளையடி கடல் நீர் சுத்திகரிப்பு நிலையம் கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் 02ஆம் திகதி அப்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் திறந்து வைக்கப்பட்டது.

ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் இலங்கை அரசாங்கத்தின் நிதி ஏற்பாடுகளின் கீழ் நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டு அமைச்சு, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினால் யாழ்ப்பாணம் - கிளிநொச்சி நீர் வழங்கல் வேலைத்திட்டத்தின் கீழ் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது.

இந்த கடல் நீர் சுத்திகரிப்பு நிலையம் 266 மில்லியன் டொலர்கள் செலவில் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தற்காலிக கடமையை நிரந்தரமாக்க கோரி ஐக்கிய சேவையாளர் ஆர்ப்பாட்டம்




மட்டக்களப்பு, மே .20

மட்டக்களப்பில் வீதி அதிகார சபையில் தற்காலிகமாக கடமையாற்றிவரும் ஊழியர்களை நிரந்தரமாக்க கோரி ஐக்கிய பொது சேவையாளர் சங்கம் செவ்வாய்க்கிழமை பொலிஸ் நிலைய வீதி சுற்றுவட்டத்தில் இருந்து காந்தி பூங்கா வரை ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் ஈடுபட்டனர்.

வீதி அதிகார சபையில் தற்காலிகமாக இணைக்கப்பட்ட 141 ஊழியர்கள் கடந்த 9 வருடங்களுக்கு மேலாக கடமையாற்றி வருகின்றநிலையில் அவர்களை இதுவரை காலமும் நிரந்தரம் ஆக்கப்படவில்லை எனவே அவர்களை நிரந்தராக்குமாறு கோரி ஐக்கிய பொது சேவையாளர் சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்ட தலைவர் சுரேஷ் தலைமையில் ஆர்ப்பாட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது

இதையடுத்து நகரிலுள்ள பொலிஸ் நிலைய வீதிச் சுற்றுவட்டத்துக்கு அருகில் ஒன்று கூடிய வீதி அதிகார சபையில் தற்காலிகமாக கடமையாற்றி வரும் ஊழியர்கள் பகல் 12.00 மணிக்கு ஒன்று திரண்டு அனைத்து தற்காலிக

ஊழியர்களை நிரந்தரமாக்கு, 14 நாள் மருத்துவ லீவு வழங்கு, ஏனைய ஊழியர்களுக்கு வழங்கும் சலுகைகளை வழங்கு, ஜனாதிபதியே எங்களை நிரந்தரமாக்கு போன்ற சுலோகங்கள் ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்

இந்த ஆர்ப்பாட்டம் 1.00 மணிவரை இடம்பெற்ற பின்னர் ஆர்பாட்டகாரர்கள் அங்கிருந்து கலைந்து சென்றனர். (ஐ)

## குறைந்த வருமான வைப்பாளர்களுக்கு நிவாரணம்

கொழும்பு, மே .20

*குறைந்த வருமானம்கொண்ட வைப்புத் தொகையாளர்களுக்குநிவாரணம்வழங்கும் வகையில், 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்கஉண்ணாட்டரசிறைச்சட்டத்திற்கான திருத்தத்துக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது. ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, தலைமையில், திங்கட்கிழமை (19) கூடிய வாராந்த அமைச்சரவைக்கூட்டத் திலேயே இந்தத் தீர்மானம் எட்டப்பட்டது.*

*நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.*

*2025.04.01 அன்று தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் வரி வீதம் 5 சதவீதம் தொடக்கம் 10 சதவீதம் வரை அதிகரிப்பதற்கான சட்டரீதியான ஏற்பாடுகள் 2025 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க உண்ணாட்டரசிறை (திருத்தச்) சட்டத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.*

*வரி அறவிடப்படுகின்ற வருடாந்த வருமான எல்லையான 1.8 மில்லியன் ரூபாய்களை விஞ்சாத வருமானத்தைக் கொண்ட நபர்களின் தக்கவைக்கப்பட்ட வரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதால், அவ்வாறான வைப்பாளர்கள் மற்றும் குறைந்த வருமானங்கொண்டவர்கள் சிரமங்களுக்கு உள்ளாவதாகக் கண்டறியப்பட்டுள்ளது.*

*குறித்த பிரச்சினைக்கான தீர்வாக வரி விடுப்புக்குக் குறைவான வருமானத்தைக்கொண்டுள்ள நபர்களுக்கு சுய பிரகடனத்தைச் சமர்ப்பிக்கின்ற முறையொன்றை அறிமுகப்படுத்துவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.*

*அதற்கிணங்க, வட்டி மீதான தக்கவைக்கப்பட்ட வரியை அறவிடுவதிலிருந்து விடுவிப்பதற்கு 1.8 மில்லியன் ரூபாய்களை விஞ்சாத மதிப்பீட்டு வருமானத்துடன் கூடிய அனைத்து நிலையான வைப்பாளர்களுக்கு சுய பிரகடனத்தை அறிமுகப்படுத்துவதற்கும் மற்றும் அனைத்து வகையான வங்கிக் கணக்குகளையும் திறப்பதற்காக வரி அறிமுக இலக்கத்தை (வுஐனு) சமர்ப்பிப்பதற்குக் கட்டாயமாக்கும் தகுந்த திருத்தத்தை உள்வாங்கி 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உண்ணாட்டரசிறைச் சட்டத்திற்கான திருத்தம் செய்வதற்காக அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.*

# நீட் தேர்வு ரத்து பொய்யால் மாணவர் உயிரிழப்பு:

## தி.மு.க., மீது பாயும் இ.பி.எஸ்.



தி.மு.க.,வின் நீட் தேர்வு ரத்து நாடகத்திற்கு மாணவர்கள் பலியாக வேண்டாம் என்று அ.தி.மு.க., பொதுச் செயலாளர் இ.பி.எஸ்., கேட்டுக் கொண்டுள்ளார்.

சேலம் சூரமங்கலம் அருகே உள்ள நரசோதிப்பட்டி பகுதியைச் சேர்ந்த மாணவர் கௌதம், நீட் தேர்வு அச்சத்தால் தன் இன்னுயிரை மாய்த்துக் கொண்டதாக வரும் செய்தி அதிர்ச்சியளிக்கிறது.

ஸ்டாலின் மாடல் தி.மு.க., ஆட்சி பொறுப்பேற்றதில் இருந்து 24வது மாணவர் நீட் தேர்வால் உயிரிழப்பு. ஒரு பொய்யின் விளைவு என்ன என்பதை இப்போதாவது ஸ்டாலின் உணர்வாரா?

அன்பிற்கினிய மாணவச் செல்வங்களே, தி.மு.க., ஆட்சி வந்தால் நீட் ஒழிந்துவிடும் என இந்த டம்மி அப்பாவும், அவர் மகனும் கூறிய அத்தனையும் பொய், பொய், பொய்.

ஊழல் செய்யவும், கொள்ளையடித்த பணத்தைக் காப்பாற்றவும், நுனு ரெய்டுக்கு பயந்து 'தம்பி'யை தப்பிக்க வைக்கவுமே இவர்களுக்கு நேரம் சரியாக இருக்கிறது. (யார் அந்த தம்பி?)


இவர்களா நீட் ரத்து செய்யப்போகிறார்கள்? அத்தனையும்நாடகம். தி.மு.க.,வின்நாடகத்திற்கு நீங்கள் பலியாக வேண்டாம்.

ஒரு முறை, ஒரே ஒரு முறை, உங்கள் பெற்றோர்களைப் பற்றி சிந்தித்து பாருங்கள். அவர்களுக்கு நீங்கள்தான் உலகமே. அவர்களை விட்டுச் செல்ல ஒருபோதும் நினைக்காதீர்கள்.

இந்த உலகில் எத்தனையோ வாய்ப்புகள் இருக்கின்றன. உங்களுக்காக பல்வேறு கதவுகள் திறந்து உள்ளன. அவைகளை கண்டறிந்து முன்னேறுங்கள். மனம் தளரவேண்டாம்.

தம்பி கௌதமின் பெற்றோருக்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஸ்டாலின் அவர்களே, வெட்டியாக எடுக்கும் உங்கள் போட்டோ ஷூட்டை நீட் மாணவர்களுக்காக ஒருமுறை எடுத்து, அவர்களிடம் நீங்கள் சொன்ன பொய்க்காக பகிரங்க மன்னிப்பு கேளுங்கள்.. இவ்வாறு அவர் கூறியுள்ளார். (ஐ)



## வீட்டு மின் கட்டணம் உயராது அமைச்சர் சிவசங்கர் அறிவிப்பு

தமிழகத்தில் வீட்டு மின் கட்டணத்தில் எவ்வித மாற்றமும் இருக்கக்கூடாது என முதல்வர் அறிவுறுத்தி உள்ளார்," என தமிழக அமைச்சர் சிவசங்கர் கூறியுள்ளார்.

தமிழகத்தில் ஜூலை முதல் மின்சார கட்டணம் உயர வாய்ப்பு உள்ளதாக செய்திகள் வெளியாகி வருகின்றன. இது தொடர்பாக தமிழக மின்சார வாரியத்திற்கு மின்சார ஒழுங்குமுறை வாரியம் பரிந்துரை செய்துள்ளதாகவும் அதில் கூறப்பட்டது.

இதற்கு தமிழக அரசியல் கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்தன. மின்கட்டணத்தை உயர்த்தக்கூடாது என தலைவர்கள் தெரிவித்து உள்ளனர்.

இந்நிலையில், தமிழக போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சிவசங்கர் வெளியிட்ட அறிக்கையில் கூறியுள்ளதாவது: கடந்த சில நாட்களாக செய்தி ஊடகங்களில் மின் கட்டண உயர்வு குறித்து அதிகாரப்பூர்வமற்ற தகவல்கள் வெளிவந்த வண்ணம் உள்ளன.

தற்போது மின் கட்டண உயர்வு குறித்து எவ்விதஉத்தரவும் தமிழக மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தினால் வெளியிடப்படவில்லை. எனினும் ஒழுங்குமுறை ஆணையம் மின்கட்டணம் தொடர்பான உத்தரவு வழங்கினால், அதனை நடைமுறைப்படுத்துகையில் வீட்டு மின் நுகர்வோர்களுக்கு எவ்வித மின் கட்டண உயர்வும் இருக்கக் கூடாது. தற்போது வழங்கப்படும் அனைத்து இலவச மின்சாரச் சலுகைகளும் தொடர வேண்டும் என முதல்வர் அறிவுறுத்தி உள்ளார். இவ்வாறு அந்த அறிக்கையில் சிவசங்கர் கூறியுள்ளார். (ஐ)

## அதிகாலை பயணத்தில் விபத்து மரத்தில் கார் மோதியதில் ஒரே குடும்பத்தில் 3 பேர் பலி




திருப்பூர் மாவட்டம், காங்கேயம் அருகே, அதிகாலையில் கார் புளிய மரத்தில் மோதிய விபத்தில் அரசு மருத்துவமனை செவிலியர் உள்பட ஒரே குடும்பத்தை சேர்ந்த 3 பேர் உயிரிழந்தனர்.

கேரள மாநிலம், இடுக்கி மாவட்டம், மூணாறு பகுதியை சேர்ந்தவர் ராஜா (46). இவரது மனைவி ஜானகி (40). இவர் ஈரோடு மாவட்டம், அரச்சலூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஒப்பந்த செவிலியராக பணிபுரிந்து வருகிறார். இவர்களது 2 மகள்கள் ஹேமி மித்ரா (15), மௌனா ஷெரின் (11). நவரசம் பள்ளியில் 10மற்றும் 5ம் வகுப்பு படித்து வருகிறார்.

நள்ளிரவு பயணத்தால் கோர விபத்து லாரி– பஸ் மோதி 4 பேர் பரிதாப பலி!

இவர்கள் மருத்துவமனை குடியிருப்பில் வசித்து வந்துள்ளனர். கடந்த 10 நாட்களுக்கு முன்னர் கேரளாவில் உறவினர் இல்ல விஷேசத்திற்கு சென்றுள்ளனர். பின்னர் இன்று அதிகாலை 3 மணிக்கு கேரளாவில் இருந்து காரில் அரச்சலூர் திரும்பியுள்ளனர். அப்போது காங்கேயம் அருகே நத்தக்காடையூர் பகுதியில் சென்ற போது, கட்டுப்பாட்டை இழந்த கார் எதிரே இருந்த புளியமரத்தில் மோதியுள்ளது.

இதில் சம்பவ இடத்திலேயே காரை ஓட்டி வந்த ராஜா, அவரது மனைவி ஜானகி, மூத்த மகள் ஹேமிமித்ரா ஆகிய 3 பேர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர். படுகாயமடைந்த 11 வயது சிறுமி திருப்பூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். விபத்து குறித்து காங்கேயம் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

விபத்து அதிகாலை நேரத்தில் நிகழ்ந்துள்ளது. தூக்க கலக்கத்தில் வாகனம் ஓட்டும்போது சற்று கண் அசந்தாலும் பெரும் விபத்து நேரிட்டு விடும். எனவே, இரவு, அதிகாலை நேரங்களில் பயணத்தை தவிர்க்க வேண்டும் என்பதை இந்த சம்பவம் உணர்த்துகிறது.

(ஐ)

## குவாரியில் கற்கள் சரிந்து விபத்து தொழிலாளர் 5 பேர் பலி



சிவகங்கையில் கல்குவாரியில் கற்கள் சரிந்து தொழிலாளிகள் 5 பேர் உயிரிழந்த சம்பவம் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

சிவகங்கை மாவட்டம் சிங்கம்புணரி அருகே மல்லாக்கோட்டையில் மேகா புளூ மெட்டல் என்ற தனியார் கல்குவாரி இயங்கி வருகிறது. இங்கு வெளியில் இருந்து கொண்டு வரும் கற்களை கொண்டு எம்.சாண்ட் மணல் தயாரிக்கப்படுகிறது.

குவாரி உள்ளேயும், பெரிய பள்ளம் தோண்டப்பட்டு கற்கள் வெட்டி எடுக்கப்படுகிறது. குவாரிப்பள்ளத்தில் இன்று (மே 20) காலை தொழிலாளர்கள் வழக்கம் போல் வேலை பார்த்துக் கொண்டிருந்தனர். அப்போது திடீரென கற்கள் சரிந்து தொழிலாளர்கள் சிக்கினர். 3 பேர் இடிபாடுகளுக்குள் சிக்கி சம்பவ இடத்திலேயே இறந்தனர். இரண்டு பேர் மீட்கப்பட்டு சிகிச்சைக்கு கொண்டு செல்லும் வழியில் இறந்தனர். நீண்ட நேரம் போராடி மீட்பு பணி மேற்கொள்ளப்பட்டது. மைக்கேல் என்பவர் படுகாயம் அடைந்து சிகிச்சையில் உள்ளார்.

உயிரிழந்தவர்கள் கணேஷ், முருகானந்தம், ஆறுமுகம், அர்ஜித், ஆண்டிச்சாமி என்பது போலீசார் விசாரணையில் தெரியவந்தது. இந்த விபத்து குறித்து வழக்குப்பதிவு செய்து போலீசார் விசாரிக்கின்றனர். (ஐ)

# வாழு வாழ விடு!



பிருந்தா சேது

‘ஒரு மனிதனால் முடிகிற எந்த ஒரு விஷயமும் இன்னொரு மனிதனால் முடியும்’ என்கிறார் மார்கஸ் அரேலியஸ்.

மொட்டை மாடியில் இரண்டடி அகலச் சுவரில் நடக்க முடியுமா என்று நினைத்துப் பார்த்தோமானால், நாம் முடியாது என்று நினைப்போம். ஆனால், இப்படி நினைத்துப் பாருங்கள். நமது தின வாழ்வில் நாம் நடந்து செல்வதற்கு ஒன்றரை அடி அகலம் எடுத்துக்கொள்கிறோமா, அந்த அகலத்தில்தான் நாம் நடக்கிறோம். அதைவிடவும் அதிகமாகத்தான் இருக்கிறது இரண்டடி அகலச் சுவர். ஆனால், அதில் நடக்க முடியாது என்று நாமாக நினைத்துக் கொள்வோம்.

அதே போல இன்னொரு விஷயம், பொதுவாகக் கண்ணாடிப் பொருள்களை எடுக்கும்போது கீழே விட்டுவிடுவோமோ என்று பதற்றம் கொள்வோம். ஆனால், தினமும் மற்ற பொருள்களை எத்தனை முறை எடுக்கிறோம் அப்படி எடுக்கும்போது எத்தனை முறை கீழே விட்டோம்? இப்படி யோசித்துப் பார்த்தால், கண்ணாடிப் பொருள்கள் மேல் நமக்கிருக்கும் பயம், போய்விடும்.

இந்தப் பிரபஞ்சம் நமக்காகச் சிந்தித்து, நமக்காகச் செயல்படும் என்பதை நாம் நம்ப மறுப்போம். ஆனால், உண்மை அப்படி இல்லை. ஓர் உதாரணம் மூலமாக இதை விளக்க விரும்புகிறேன். நமது ஆட்காட்டி விரல் கதவிடுக்கில் நசுங்கிவிடுகிறது என வைத்துக்கொள்வோம். வலி உயிர் போய்விடும் இல்லையா? நாளெல்லாம், அது ஆறுகிறவரை அந்த வலிதான் நம் நினைவில் இருக்கும் இல்லையா?

ஒரு கதை உண்டு. புதுமைப் பித்தன் எழுதியதாக நினைவு. பரம ஏழை ஒருவர் மகளுக்குக் கல்யாணம் நிச்சயித்திருப்பார். அவருக்கு ஆயிரத்தெட்டு தேவைகள் இருக்கும். எங்கெங்கோ கடன் வாங்கி இருப்பார். அப்போதும் போதாமல் அதிக தேவைகள் இருக்கும்.

இப்போது கடவுள் தன் எதிரில் வந்தால், அவரிடம் இதைக் கேட்க வேண்டும் அதைக் கேட்க வேண்டும் கடவுள் மட்டும் ஒரே ஒருமுறை எதிரில் தோன்றினால் எப்படி இருக்கும் என்றெல்லாம் நினைத்தபடி, பக்கத்து ஊருக்குப் பேருந்தில் பயணித்துக்கொண்டிருப்பார்.

அப்போது அவருக்குத் திடீரென சிறுநீர் கழிக்க வேண்டுமென உந்துதல் ஏற்படும். அந்தப் பேருந்துப் பிரயாணத்தில் ‘அப்பா எப்படா பஸ் நிற்கும்’ என அவரின் பதற்றம் அதிகமாகிக்கொண்டே போகும். இந்த நிறுத்தத்தில் நின்றால், நாம் இறங்கிப் போய்விட்டு வரலாம் இதில் நின்றால் போய் வரலாம் என்று பார்த்தால், பேருந்தோ நிற்காமல் போய்க்கொண்டிருக்கும்.

அப்போது திடீரென அவர் முன் கடவுள் தோன்றி, ‘என்ன வரம் வேண்டும்’ எனக் கேட்பார். ஆனால், அவரோதான் கேட்க நினைத்திருந்த எல்லாவற்றையும் மறந்துவிட்டு, ‘எனக்கு இப்போது அவசரமாகச் சிறுநீர் கழிக்க வேண்டும்’ என்பார்.

அந்தக் கதை போலத்தான் உடம்பிற்கு ஒன்று என்றால், அதைத் தவிர மனம் வேறெதையும் நினைக்காது.

இதே உடல், வலி, வாதை வைத்துப் பிரபஞ்ச ரகசியத்தையும் நாம் எளிதாகப் புரிந்துகொள்ள முடியும்.

‘கடலின் ஒரு துளி நாம் ஒரு துளி கடல் நாம் ரூமி’

என்றெல்லாம் நாம் வாசித்திருப்போம். ஆனால், நமக்காக இந்தப் பிரபஞ்சமே வேலை செய்யக் காத்திருக்கிறது மொத்தப் பிரபஞ்சமுமே நாம் நினைப்பதை நிறைவேற்றித் தரும் என்பதை நாம் நம்ப மாட்டோம்.

நமது பிரச்னை என்ன என்று நம்கூட இருப்பவர்களுக்கே தெரியாதபோது, உணர முடியாத போது, இவ்வளவு பெரிய பிரபஞ்சம் புரிந்துகொள்வதாவது எனக் கேலியாக நினைப்போம். நாம் விரும்புவதற்கு எதிராக நாமே சிந்தித்து அதை நடக்க விடாமல் தடுப்போம். இந்த இருவித சிந்தனைகளும் ஒருவித முரண்பட்ட பல் சக்கரங்கள் போல இறுகி இயங்க விடாமல் செய்துவிடும்.

சரி, நமது பிரச்சினைகளைத் தீர்த்துக் கொடுப்பதற்கோ நமதான விருப்பங்களை நடத்திக் கொடுப்பதற்கோ பிரபஞ்சம் ஓடி வருமா வராதா?

வரும் நிச்சயம் வரும் ஒரு நகக் கண் அளவு வலிக்கு எப்படி மொத்த உடலுமே பதறித் துடிக்கிறது இல்லையா? அது ஆறும் வரை நமது நினைவிலேயே அது இருக்கிறது இல்லையா? அதே போலத்தான் நமக்கு ஒன்று என்றால் இந்தப் பிரபஞ்சமும் பதறும். அதையே நினைவில் கொண்டு, நாம் நினைப்பதை நிச்சயம் நிறைவேற்றித் தரும். அதை நாம் உணர வேண்டும் நம்பிக்கையுடன் செயல்பட வேண்டும்.

நாம் நமது எண்ணங்களைச் சரி பண்ணப் பண்ண, நமது மொத்த உலகமுமே மாறும்.

நிறைவாக, ‘சொல்லிக் கொடுத்த சொல்லும் கட்டிக் கொடுத்த சோறும் எத்தனை நாளைக்கு’ என்பார்கள். அப்படித்தான் மற்றவர்களிடமிருந்து நாம் பெறும் அறிவுரைகள். அவை நம்மை எப்போதும் காப்பாற்றும் என்று சொல்லிவிட முடியாது.

ஆளுமைத் திறன் வகுப்புகளும் சரி, ஆன்மிகப் பயிற்சி வகுப்புகளும் சரிசெய்வது ஒன்றைத்தான்.

ஒரு ஜென் கதை:

ஒரு சம்சாரி, ‘சாமி எனக்கு நிம்மதியே இல்லை சாமி வாழப் பிடிக்கவில்லை’ என்று துறவியிடம் சென்றானாம்.

அவனது பிரச்னைகளை எல்லாம் செவிமடுத்த துறவி, அவன் வைத்திருந்த ஆடுகளை எல்லாம் வீட்டிற்குள் கொண்டுவந்து கட்டச் சொன்னாராம். ஒருவாரம் கழித்து திரும்ப வந்தானாம்.

துறவி, ‘எப்படி இருக்கிறாய்’ என்று கேட்க, ‘ஐயோ, அத ஏன் சாமி கேக்கறீங்க் ஆடுங்க கழியுறதைச் சுத்தம் பண்ணவே பொழுது போயிருது. ‘மே’னு ஒரே சத்தம் வேற’ என்று புலம்பினானாம்.

துறவி, அவனிடமிருந்த கோழிகள், பன்றிகள் யாவற்றையும் வீட்டிற்குள்ளேயே வைத்துக்கொள்ளச் சொல்லி, சிறிது நாள்கள் கழித்து வந்து சந்திக்கச் சொன்னாராம்.

கொஞ்ச நாள்கள் கழித்து துறவியிடம் வந்த அவன், அழுமாட்டாத குறையாகப் புலம்பினானாம்.

அனைத்தையும் கேட்ட துறவி, ‘கோழிகள், பன்றிகள், ஆடுகள் என யாவற்றையும் ஒவ்வொன்றாக வெளியே விடு கொஞ்ச நாள் கழித்து வா’ என்றாராம்.

ஒருநாள் மிகுந்த முக மலர்ச்சியுடன் அவன் துறவியிடம் வந்து, ‘வீடு சொர்க்கம் போல இருக்கு சாமி’ என்றானாம்.

கூர்ந்து கவனித்தவர்களுக்குத் தெரியும். அப்படித்தான், இதைத்தான் இந்த ஆளுமைத் திறன் வகுப்புகளும் ஆன்மிகப் பயிற்சி வகுப்புகளும் செய்கின்றன. அது தற்காலிகமாக விடுதலை உணர்வைத் தருபவை. வெளியே இருக்கிற பிரச்னைகளை உள்ளே விட்டு, மறுபடியும் வெளியே விடுகிற கதைதான். ஆனால், பிரச்னைகள் என்பவையோ மாறாமல் எப்போதும் இருப்பவைதான். பசி, தூக்கம், காலை, மாலை இரவு போல திரும்பத் திரும்ப வருவனதான்.

நாம் மெத்த படித்து நிறைய யோசிக்கிற, உயர்ந்த பண்பாளர்களாக இருந்தாலுமே, ஒரு விபத்து போல எதிர்பாராமல் திடீரென நம் வாழ்வைக் குலைக்கிற விஷயங்களில் தடுமாறித்தான் போவோம். அல்லது மெதுவாக கண் முன்பாகவே, மனம் உணராமல், ஒரு செடியாக ஃ மரமாக வளர்ந்து நிற்கிற விஷ விருட்சங்களை, திடீரென உணர்ந்த நாளில் வேரறுக்க முடியாமல் திண்டாடுவோம்.

முக வாதம் என்பார்கள், சிலருக்கு ஸ்ட்ரோக் திடீரென ஒரே நாளின் ஒரு பொழுதில் ஏற்படும் சிலருக்குத் தூசி படர்வது போல அடர்ந்து மெதுவாக ஏற்படும். வாழ்க்கை சூழல்களும் அப்படித்தான். அப்படியான சூழல்கள் ஏற்படும் போது அதை எப்படி எதிர்கொள்கிறோம் என்பது, நாம் எப்பேர்ப்பட்டவர்களாக இருந்தாலும் அந்தந்த நேரத்தை அப்போதைய மனநிலையை மன தைரியத்தைப் பொறுத்தது.

முகத்திற்கு க்ரீம் தடவுவதால் சுருக்கங்கள் மறைந்து பொலிவுடன் இருப்பதாக நினைக்கிறோம். மாறாக, க்ரீமை விரல்களால் தொட்டு முகத்தின் தசைகளை சில நிமிடங்கள் நாம் செய்யும் மசாஜ் காரணமாகவே முகத்தின் பொலிவு நிகழ்கிறது.

அந்த க்ரீம் போலத்தான் ஆளுமைப் பயிற்சி வகுப்புகள் ஆன்மிகப் பயிற்சி வகுப்புகள்! அந்தப் பயிற்சி வகுப்புகளால் அல்ல, அந்தப் பயிற்சிகளின்போது ‘நமது மனம் கொள்ளும் உத்வேகங்களால்’ மட்டுமே நம் வாழ்க்கையில் மகிழ்வுறும் மாற்றங்கள் நிகழ்கின்றன.

‘லூயிஸ் ஹே’ தொடங்கி ‘லேண்ட்மார்க் ஃபாரம்’ வரை, ‘மகரிஷி’ தொடங்கி ‘ஜக்கி’ வரை எல்லாருமே எல்லாமே வெறும் க்ரீம் மட்டுமே.

நமது வாழ்வின் மனச்சுருக்கங்களை நாம்தான் சரிசெய்ய முடியும். சொல்லப்போனால் நாம் நினைத்தால் மட்டுமே சரி பண்ணிக்கொள்ள முடியும்.

மருத்துவர்கள் அறிவார்கள், எலும்பு முறிவோ மனமுறிவோ தானே தன்னைத் தகவமைத்துக்கொள்ளும்படிதான் நமது உடலும் மனமும் படைக்கப்பட்டிருக்கிறது. என்ன, கதவைத் திறக்கும்போது ‘திறந்திடு தீசேம்’ மந்திரத்தை மறந்து விடாதிருக்க வேண்டும் இல்லாவிடில், வாழ்க்கைத் துண்டாடிவிடும்.

யாரும் எதையும் கொண்டு வரவில்லை எதையும் கொண்டு போவதுமில்லை.

ஒரே முறைதான் இந்த வாழ்வு அதை யாரையும் துன்பப் படுத்தாமல், எந்தளவு மகிழ்வாக வாழ்கிறோம் என்பதில்தான் நமது மனப் பக்குவம் இருக்கிறது. அப்படி வாழ்வோம்.

# உக்ரைனில் போரை முடிவுக்கு கொண்டு வர தயார்: டிரம்புடன் பேசிய பிறகு ரஷ்ய அதிபர் புடின் மனமாற்றம்

"உக்ரைனில் போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு ரஷ்யா தயாராக உள்ளது" என அமெரிக்க அதிபர் டிரம்புடன் இரண்டு மணி நேர தொலைபேசி உரையாடலுக்குப் பிறகு, ரஷ்ய அதிபர் புடின் அறிவித்தார்.

ரஷ்யா – உக்ரைன் இடையே, கடந்த 2022 பிப்ரவரியில் இருந்து போர் நீடிக்கிறது. அமெரிக்க அதிபர் டிரம்ப் போர் நிறுத்தத்திற்கு பலமுறை அழுத்தம் தந்த போதிலும், எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை. நேற்று ரஷ்ய அதிபர் புடினுடன் டிரம்ப் இரண்டு மணிநேரம் பேச்சு நடத்தினார். பின்னர், ரஷ்ய அதிபர் புடின் கூறியதாவது: மூன்று ஆண்டு கால மோதலை முடிவுக்குக் கொண்டு வர உக்ரைனுடன் இணைந்து பணியாற்ற ரஷ்யா தயாராக இருக்கிறது. அமெரிக்க அதிபர் உடன் நாங்கள் உடன்பட்டுள்ளோம். அமைதி தீர்வுக்கு ஆதரவாக உள்ளேன். இரு தரப்புக்கும் ஏற்புடைய சமரசங்களை கொண்டுவர வேண்டும். இது குறித்த டிரம்புடனான பேச்சு நேர்மையானதாகவும் அர்த்தமுள்ளதாகவும் இருந்தது. எடுத்துக்காட்டாக, தீர்வுக்கான கொள்கைகள், சாத்தியமான அமைதி ஒப்பந்தத்தின் நேரம் போன்ற பல நிலைப்பாடுகளை வரையறுத்துள்ளோம். அமைதியை நோக்கிச் செல்வதற்கான மிகவும் பயனுள்ள வழிகளை நாம் உருவாக்க வேண்டும். இவ்வாறு ரஷ்ய அதிபர் புடின் கூறியுள்ளார்.

முன்னேற்றம் ஏற்பட்டு வருவதாக நான் நினைக்கிறேன். சராசரியாக ஒவ்வொரு வாரமும் 5,000 இளம் வீரர்கள் கொல்லப்படுகிறார்கள். நாங்கள் அதைத் தடுக்க முயற்சிக்கிறோம்.

மிகவும் மோசமான, மிகவும் கொடூரமான செயற்கைக்கோள் படங்களை நான் பார்த்திருக்கிறேன். போர் நிறுத்தத்தை கொண்டு வர, நாங்கள் எங்களால் முடிந்ததைச் செய்கிறோம்.

இவ்வாறு அதிபர் டிரம்ப் கூறியுள்ளார்.



இது குறித்து உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி கூறியதாவது: போரை முடிவுக்குக் கொண்டு வர விரும்புகிறேன். ஆனால் ரஷ்யா தயாராக இருக்கிறதா என்று தெரியவில்லை. ரஷ்ய தரப்பின் கொள்கைகள் எனக்குத் தெரியாது. அமெரிக்க அதிபர் டிரம்புடனான எங்கள் உரையாடலில் இருந்து நான் புரிந்துகொண்டேன். அவர்கள் எவ்வாறு பார்க்கிறார்கள் என்பது குறித்த தகவல் தெரிவிக்க வேண்டும்.

எல்லோரும் போர் நிறுத்தத்தில் மிகவும் ஆர்வமாக உள்ளனர் என்பதை நான் உண்மையிலேயே நம்புகிறேன். மிக அதிகமான இழப்புகள் நாங்கள் உண்மையில் இந்த போரை முடிக்க விரும்புகிறோம். ரஷ்யாவிடம் இருந்து நாங்கள் விரும்புவது இதுதான். போரை நிறுத்த அவர்கள் உண்மையிலேயே தயாராக இருக்கிறார்கள் என்பதைக் காட்ட, முதலில் இடைக்கால போர் நிறுத்தம் கொண்டு வர வேண்டும். இவ்வாறு ஜெலன்ஸ்கி கூறியுள்ளார். (ஐ)



## இடம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு நன்றி தெரிவிக்கும் நிகழ்வு

சிங்கப்பூரின் 60வது சுதந்திர தினத்தை முன்னிட்டு, அந்நாட்டில் உள்ள, 60க்கும் மேற்பட்ட இந்திய உணவகங்கள் ஒன்றிணைந்து, நேற்று முன்தினம் நாள் முழுதும், சிங்கப்பூர் வளர்ச்சிக்கு உதவும் இடம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு உணவு படைத்து மகிழ்ந்தன. தொழிலாளர் தினத்தை முன்னிட்டு, சிங்கப்பூரில், 'லிட்டில் இந்தியா' எனப்படும் இந்தியா, வங்கதேச தொழிலாளர்கள் அதிகம் வசிக்கும் பகுதியில் நடந்த இந்த நிகழ்வில், ஏராளமான உள்ளூர் மக்களும் கலந்து கொண்டனர். 'எங்கள் வீடுகளை கட்டவும், உள்கட்டமைப்பு திட்டங்களை செயல்படுத்தவும், இந்த நகரை அமைதியாக பராமரிக்கவும், வெளிநாடுகளில் இருந்து இங்கு வந்து உழைக்கும் தொழிலாளர்களின் மதிப்பு, விலை மதிப்பில்லாதது. அத்தகையவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் விதமாக, இந்த நிகழ்வு நாள் முழுக்க நடத்தப்பட்டது' என, சிங்கப்பூரின் மனிதசக்தி அமைச்சர் டான் சீ லெங் கூறினார்.

தங்கள் சொந்த நாடுகளில் இருந்து இடம்பெயர்ந்த இந்தியா மற்றும் வங்கதேச தொழிலாளர்களுக்கு நன்றி தெரிவித்து நடத்தப்பட்ட இந்த நிகழ்வில், 60,000 உணவு பொட்டலங்கள் தயாரிக்கப்பட்டன.

சைவ, அசைவ உணவு பொட்டலங்கள் தயா ரிக்கப்பட்டு, இந்திய தொழிலாளர்கள் வசிப்பிடங்களில் இலவசமாக வழங்கப்பட்டன. (ஐ)

## அமெரிக்காவில் சூறாவளி 27 பேர் பலியான பரிதாபம்

அமெரிக்காவின் மத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களான கென்டக்கி, மிசோரி, விர்ஜீனியாவை அடுத்தடுத்து கடுமையான சூறாவளி தாக்கியதால் 28 பேர் உயிரிழந்தனர்.

ஷகென்டக்கி மாகாணம் தான் சூறாவளியால் அதிக பாதிப்பை சந்தித்துள்ளது. அங்கு மட்டும் ஒரு தீயணைப்பு வீரர் உள்பட 19 பேர் உயிரிழந்தனர். சூறாவளியில் நூற்றுக்கணக்கான வீடுகள் சேதமடைந்ததுடன், வாகனங்கள் தூக்கி வீசப்பட்டன.

மிசோரியின் செயின்ட் லூயிஸ் பகுதியில் மணிக்கு 140 கி.மீ., வேகத்தில் சூறாவளி காற்று வீசியது. கனமழையுடன், புழுதி புயலும் வீசியதால் மக்கள் பெரும் சிரமத்தை சந்தித்தனர். ஆயிரக்கணக்கான வீடுகள், வணிக நிறுவனங்கள் மின்சாரமின்றி இரு ளில் மூழ்கின. மத்திய அமெரிக்கா முழுவதும் சில தினங்களுக்கு இடியுடன் கூடிய கனமழை பெய்யும் என்றும், சூறாவளி வீசும் என்றும் வானிலை ஆய்வாளர்கள் கணித்துள் ளனர். டெக்சாஸ், அர்கான்சாஸ் பகுதிகளுக்கும் சூறாவளி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

## பாக்.,கில் 10 சதவீதம் பேர் கையேந்துகின்றனர்

ஒருபக்கம் பயங்கரவாதிகளை வளர்த்துவிடுவதாக, பாகிஸ்தான் மீது குற்றச்சாட்டு உள்ள நிலையில், மறுபக்கம் அந்த நாட்டின் மொத்த மக்கள் தொகையில், 10 சதவீதம் பேர் கையேந்துகின்றனர் என்ற தகவல் வெளியாகி உள்ளது.



நம் அண்டை நாடான பாகிஸ்தான், கடும் நிதி நெருக்கடியில் உள்ளது. இதில் இருந்து மீள்வதற்காக, ஐ.எம்.எப்., எனப்படும் சர்வதேச நாணயநிதியத்திடம் இருந்து கடன் வாங்கியுள்ளது.

ஏற்கனவே இரண்டு தவணைகள் வழங்கியுள்ள நிலையில், அடுத்தகட்ட தவணைக்கு, ஐ.எம்.எப்., பல நிபந்தனைகளை விதித்துள்ளது. இதன் வாயிலாக, பாகிஸ்தானில் மின்சாரம், சமையல் காஸ் விலை உயரும் அபாயம் ஏற்பட்டுள்ளது. மேலும், விவசாயத்துக்கான வரியும் அதிகரிக்கும்.

ஒரு பக்கம் பயங்கரவாத அமைப்புகளை வளர்த்து, ஊக்குவித்து, பாதுகாப்பு அளிப்பதாக, பாகிஸ்தான் மீது கடும் குற்றச்சாட்டு உள்ளது. மறுபக்கம், அந்த நாட்டின் மொத்த மக்கள் தொகையில், 10 சதவீதம் பேர் பிச்சை எடுக்கும் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர் என்ற தகவல் தற்போது வெளியாகி உள்ளது.

கடந்த, ஏப்., 19ல் சியால்கோட்டில் நடந்த ஒரு நிகழ்ச்சியில், பாகிஸ்தான் ராணுவ அமைச்சர் க்வாஜா ஆசிப் இந்த பிரச்னை குறித்து விவரித்தார்.

'மக்கள் பிச்சை எடுப்பது என்ற பிரச்னை மிகவும் தீவிரமாக உள்ளது. தொடர்ந்து இந்த எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. மொத்த மக்கள் தொகையான, 24.75 கோடி பேரில், 10 சதவீதம் பேர், அதாவது, 2.2 கோடி பேர் பிச்சை எடுக்கின்றனர்.

'இந்தத் தொழில் வாயிலாக, ஆண்டுக்கு 3.42 லட்சம் கோடி ரூபாய் கிடைக்கிறது. அதனால் உழைக்காமல், பிச்சை எடுப்பதில் அதிக ஆர்வம் காட்டுகின்றனர்.

'பிச்சை எடுப்பதற்காக பல நாடுகளுக்கும் பாகிஸ்தானியர்கள் செல்கின்றனர். இதனால், விசா வழங்குவதற்கு தற்போது பல நாடுகள் தயக்கம் காட்டுகின்றன' என, க்வாஜா ஆசிப் கூறினார்.

இதற்கிடையே, பாகிஸ்தான் உள்துறை அமைச்சர் மோஷின் நக்வி, அந்த நாட்டின் பார்லிமென்டில் சமீபத்தில் சில புள்ளி விபரங்களை வெளியிட்டார். 'சவுதி அரேபியா, ஈராக், மலேஷியா, ஓமன், கத்தார், ஐக்கிய அரபு எமிரேட்ஸ் போன்ற நாடுகளில் பிச்சை எடுத்ததாக, 2024 ஜனவரியில் இருந்து நடப்பாண்டு இதுவரை 5,402 பாகிஸ்தானியர்கள் நாடு கடத்தப்பட்டனர்' என அவர் கூறினார்.

மதம் தொடர்பான நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காகச் சென்று, இவர்கள் அந்த நாடுகளிலேயே தங்கியிருந்து பிச்சை எடுத்து வந்ததாக அவர் குறிப்பிட்டார்.

இதனால், தற்போது, பாகிஸ்தானியர்களுக்கு விசா வழங்குவதற்கு, இந்த நாடுகள் தயக்கம் காட்டி வருகின்றன. மேலும், பாகிஸ்தான் அரசுக்கும் சில நாடுகள் எச்சரிக்கை விடுத்துள்ளன.

மூன்று ஆண்டுக்கு முன் ஒரு நிகழ்ச்சியில் பேசிய பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப், 'நட்பு நாடுகள் கூட நம்மை பிச்சைக்காரர்களாக பார்க்கின்றன' என, குறிப்பிட்டிருந்தார்.

இதற்கிடையே சமூக வலைதளங்களிலும் பலர், பாகிஸ்தானின் இந்த நிலைமை குறித்து விமர்சித்துள்ளனர். (ஐ)

## காட்டு

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வீதிக்கரையில் நின்ற காட்டு யானை அவரைத் தாக்கியுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவத்தில் கன்னாட்டி - கணேசபுரம் பகுதியைச் சேர்ந்த 63 வயதுடைய பா.சுப்பிரமணியம் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பறையனாலங்குளம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## வைத்தியர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நீதிமன்றின் நீதிபதிகளான சசி மகேந்திரன், அமல் ரணராஜா ஆகியோர் அடங்கிய அமர்விலேயே இந்தத் தீர்ப்பை இன்று அறிவித்தது. இது தொடர்பாக ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா, ஜனாதிபதி சட்டத்தரணி அனில் சில்வா ஆகியோரின் வாதங்களை ஏற்ற நீதிமன்றம் இந்தத் தீர்ப்பை அறிவித்தது.

வவுனியாவில் கடந்த 2009 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 20 ஆம் திகதி கற்குழியில் அமைந்துள்ள தனியார் வைத்தியசாலையில் கடமையில் இருந்த வைத்தியரான சுல்தான் முகைதீன் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டிருந்தார்.

இது தொடர்பில் குற்றவாளியாகச் சந்தேகிக்கப்பட்ட அன்றைய புளொட் உறுப்பினரான நெடுமாறன் என்று அழைக்கப்படும் சிவநாதன் பிரேமநாத் என்பவர் மீது வவுனியா மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்கப்பட்டது.

நீண்ட விசாரணைகளின் பின்னர் கடந்த 2023 ஆம் ஆண்டு ஜூன் 8 ஆம் திகதி அப்போதைய வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதியான மா.இளஞ்செழியன் நெடுமாறன் என்பவரைக் குற்றவாளியாகக் கண்டு மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்தார்.

இந்நிலையில், இந்தத் தீர்ப்புக்கு எதிராக கௌரி சங்கரி சட்ட நிறுவனம் சார்பில் மேன்முறையீடு செய்யப்பட்டது. மேன்முறையீட்டு மனு மீதான விசாரணைகள் முடிவடைந்த நிலையில் இன்று தீர்ப்புக்காகத் திகதியிடப்பட்டிருந்தது.

அந்தவகையில், குற்றவாளிக்கு எதிராக வவுனியா மேல் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை மாற்றிய மேன்முறையீட்டு நீதிமன்றம் குறித்த மனுதாரரை வழக்கில் இருந்து முழுமையாக விடுவித்து தீர்ப்பளித்தது.

குறித்த மேன்முறையீட்டு வழக்கில் சட்டத்தரணி தர்மஜா தர்மராஜாவின் ஆலோசனையின் பிரகாரம் சட்டத்தரணிகளான அன்டன் துரைசிங்கம் ஜெயாநந்தன், ஹப்பு ஆராச்சி ஆகியோருடன் ஜனாதிபதி சட்டத்தரணிகளான கே.வி.தவராசா, அனில் சில்வா ஆகியோரும் ஆஜராகினர். சட்டமா

## மொட்டுக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நிறைவேற்றுவதற்காக வந்தோம். ஆம், சமாதானத்துக்காகவே யுத்தம் செய்தோம்.

யாரையும் பிடிப்பதற்காக அல்ல. நாட்டைப் பாதுகாப்பதற்காகவே யுத்தம் செய்தோம்.

எதிர்காலத்தில் இவை மீண்டும் நடைபெறுமா? இல்லையா? என்பதைச் சொல்ல முடியாது. அது வரும் அரசுகளைப் பொறுத்தே தீர்மானிக்கப்படும்.

யுத்தம் என்பது ஒரு துயரச் சம்பவம். ஆனால், எங்கள் இராணுவம் வெற்றி பெற்றது. யுத்தத்தில் ஒரு தரப்பு வெற்றி பெற வேண்டும் தானே." - என்றார்.

நாட்டின் தேசிய பாதுகாப்பு குறித்து ஊடகவியலாளர் ஒருவர் கேள்வி இதன்போது எழுப்பியிருந்தார்.

இதற்குப் பதிலளித்த மஹிந்த, "தேசிய பாதுகாப்பு? அதில் எந்தப் பிரச்சினையும் இல்லை. நாட்டைப் பாதுகாக்க வேண்டும்" - என்றார்.

## எதிர்க்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்தச் சந்திப்பில் கயந்த கருணாதிலக, சிவஞானம் சிறீதரன், ரவூப் ஹக்கீம், ரிஷாத் பதியுதீன், ரவி கருணாநாயக்க, ஜீவன் தொண்டமான், கே.காதர் மஸ்தான், திலித் ஜயவீர, தயாசிறி ஜயசேகர, ஜே.சி. அலவத்துவல, கலாநிதி எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா, வைத்தியர் ப.சத்தியலிங்கம், நிஸாம் காரியப்பர் ஆகிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

இந்தச் சூழ்நிலையில் நாட்டு மக்களின் நாளாந்த வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளதோடு, எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களின் பொதுச் சேவையை சுதந்திரமாக மேற்கொள்ள முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது என்று கட்சித்தலைவர்கள் சுட்டிக்காட்டினர்.

இது தொடர்பாக மீண்டும் சபாநாயகரின் கவனத்துக்குக் கொண்டு வருவதற்காக காலையில் சபாநாயகரைச் சந்திக்க எதிர்க்கட்சிக் கட்சித் தலைவர்கள் முடிவு செய்தனர். இந்தச் சந்திப்பின்போது, எதிர்க்கட்சி உறுப்பினர்களின் பணிகளை நாடாளுமன்றத்திலும் வெளியிலும் சுதந்திரமாகவும் சுயாதீனமாகவும் மேற்கொள்ளக்கூடிய சூழலை உருவாக்கும் பொறுப்பும் கடமையும் சபாநாயகருக்கு உள்ளதை வலியுறுத்த வேண்டும் என உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர்.

எழுந்துள்ள நிலைமைகள் குறித்து கலந்துரையாடுவதற்குப் பொலிஸ் மா அதிபரையும், பிரபுக்கள் பாதுகாப்புப் பிரிவின் பணிப்பாளரையும் உடனடியாக நாடாளுமன்றத்துக்கு அழைக்குமாறு சபாநாயகரிடம் கோர வேண்டும் என கட்சித் தலைவர்கள் முடிவு செய்தனர். அதன்படி சபாநாயகரைச் சந்தித்த கட்சித் தலைவர்கள் குறித்த முடிவுகள் மற்றும் யோசனைகள் குறித்து சபாநாயகருக்குத் தெரிவித்தனர்.

## டிப்பர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அதிகாலை ஒரு மணியளவில் வரணி - மந்துவில் வீதியில் இயற்றாலைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, பளைப் பகுதியிலிருந்து சட்டவிரோத மணலுடன் சென்ற டிப்பர் வாகனத்தை எழுதுமட்டுவாள் பகுதியில் கடமையில் இருந்த கொடிகாமம் பொலிஸார் நிறுத்த முயற்சித்தபோது குறித்த டிப்பர் வாகனம் நிறுத்தாது கொடிகாமம் பகுதியை நோக்கித் தப்பியோடியது.

இதையடுத்து பொலிஸாரின் அதிரடி நடவடிக்கையால் கொடிகாமம் பகுதியிலும் டிப்பர் வாகனத்தை நிறுத்தப் பொலிஸார் முயற்சித்தனர். எனினும், டிப்பர் வாகனம் நிறுத்தாது வரணியை நோக்கித் தப்பியோடியது

இதையடுத்து பொலிஸார் குறித்த டிப்பர் வாகனத்தைத் தமது வாகனத்தில் துரத்திச் சென்றனர். இந்நிலையில் டிப்பர் வாகனம் வரணி - மந்துவில் வீதியால் திரும்பிச் சென்று வேம்பிராய் நோக்கி மிக வேகமாகத் தப்பியோடியது.

இதன்போது டிப்பரில் இருந்தவர்கள் பொலிஸாரின் வாகனத்தை நோக்கி டார்ச் லைற் மூலம் பிரகாசமான ஒளியைப் பாய்ச்சினர்.

இதனால் தமது வாகனத்தைச் செலுத்த முடியாத நிலையில் பொலிஸார் டிப்பர் வாகனத்தின் ரயர்களை நோக்கித் துப்பாக்கிச்சூடு நடத்தினர்.

துப்பாக்கி வேட்டுக்கள் டிப்பர் வாகனத்தின் ரயரை வெடிக்கச் செய்ததுடன் எரிபொருள் தாங்கி மீதும் துளையிட்டது.

இதையடுத்து குறித்த டிப்பர் வாகனத்தை நிறுத்திவிட்டு சாரதி உட்பட இரண்டு சந்தேகநபர்கள் தப்பியோடினர் என்று கொடிகாமம் பொலிஸார் தெரிவித்தனர்.

சட்டவிரோத மணலுடன் சென்ற டிப்பர் வாகனத்தைக் கொடிகாமம் பொலிஸார் கைப்பற்றியுள்ளதுடன் தப்பியோடிய சந்தேகநபர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதுடன் விசாரணைகளையும் முன்னெடுத்துள்ளனர்.

## கொலைகளை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

**தேசிய பாதுகாப்பு மற்றும் பொருளாதார தாக்கம்**

வன்முறை அதிகரிப்பது தேசிய பாதுகாப்பைப் பாதிப்பதுடன், வெளிநாட்டு முதலீட்டாளர்களையும் சுற்றுலாப் பயணிகளையும் அச்சுறுத்தும். இதற்காக அரசு எவ்வளவு கவனம் செலுத்தியுள்ளது என்றும், இதற்கான நடவடிக்கைகள் எவை என்பதைத் தெரிவிக்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டது.

**போதைப்பொருள் மற்றும் அதன் தாக்கம்**

போதைப்பொருள் கடத்தல்காரர்கள் மத்தியில் ஏற்படும் மோதல்களில் பொதுமக்கள் பலியாகின்றனர். இதன் அடிப்படையில், அரசின் திட்டம் தோல்வியடைந்துள்ளதாகத் தெரிவித்து, அதற்கான மாற்றுத் தீர்வுகள் குறித்து விளக்குமாறு வலியுறுத்தப்பட்டது.

**அரசியல்வாதிகள் மீது அச்சுறுத்தல்கள்**

நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் அதிகாரிகளுக்கு எதிரான அச்சுறுத்தல்கள் தொடர்பாக அரசின் நிலைப்பாடு என்ன? மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் மற்றும் நடவடிக்கைகளின் நிலை என்ன? என்பன குறித்து விளக்கம் கோரப்பட்டது.

இந்த விடயங்களில் தெளிவான பதில் அளிக்க வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தினார்.

# சடலத்தை அடையாளம் காண உதவுமாறு பொலிஸ் கோரிக்கை



வவுனியா, மே 20

வவுனியா, மூன்றுமுறிப்புப் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் உயிரிழந்த பெண்ணின் சடலத்தை அடையாளம் காண உதவுமாறு வவுனியா பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த 16ஆம் திகதி இரவு வவுனியா, மூன்று முறிப்புப் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் 60 வயது மதிக்கத்தக்க பெண் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்திருந்தார். மேற்படி பெண்ணின் சடலம் வவுனியா பொது வைத்தியசாலையில் தற்போது வைக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்த பெண் இதுவரை பொலிஸாரால் அடையாளம் காணப்படவில்லை.

எனவே, அவரது உறவினர்கள் யாரேனும் இருந்தால் வவுனியா தலைமை பொலிஸ் நிலையப் போக்குவரத்து பொலிஸாருக்குத் தகவல் வழங்குமாறு பொலிஸார் அறிவித்துள்ளனர்.

# கெஹலியவுக்கு விளக்கமறியல் நீடிப்பு!

கொழும்பு, மே 20

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவை எதிர்வரும் ஜூன் மாதம் 3 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கெஹலிய ரம்புக்வெல இன்று செவ்வாய்க்கிழமை நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதன்போது இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளால் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட சாட்சியங்களைப் பரிசீலித்த நீதிவான் இந்த வழக்கின், மற்றுமொரு சந்தேகநபராக கெஹலிய ரம்புக்வெலவின் மகனான ரமித் ரம்புக்வெலவின் பெயரைக் குறிப்பிடுவதற்கு அனுமதி வழங்கியுள்ளார்.

கெஹலிய ரம்புக்வெல ஊழல் குற்றச்சாட்டு தொடர்பான விசாரணைக்காகக் கடந்த 7ஆம் திகதி இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவில் முன்னிலையாகியபோது ஆணைக்குழு அதிகாரிகளால் கைது செய்யப்பட்ட நிலையில், நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்கா, சுவிஸ் தூதுவர்களை சந்தித்த தமிழ்த் தேசியப் பேரவை





கொழும்பு, மே 20

நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசியப் பேரவையினர் அமெரிக்கா, சுவிஸ் நாடுகளின் தூதுவர்களுடன் இன்று செவ்வாய்க்கிழமை அந்தந்தத் தூதரங்களில் சந்திப்பு நடத்தினர்.

நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளர் செல்வராசா கஜேந்திரன், தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், சிரேஷ்ட சட்டத்தரணி ந.காண்டீபன் ஆகியோர் அமெரிக்கத் தூதரகத்தில் அந்த நாட்டுத் தூதுவரைச் சந்தித்தனர்.

இதன்போது அவர்கள், தமிழ் மக்களுக்குச் சமஷ்டி அடிப்படையிலான நிரந்தர தீர்வு வேண்டும், வடக்கில் தமிழ் மக்களின் காணி அபகரிப்பை அரசு நிறுத்த வேண்டும் எனப் பல கோரிக்கைகளை முன்வைத்தனர்.

அதன்பின்னர் மேற்படி குழுவினர் சுவிஸ் நாட்டுத் தூதுவரைச் சந்தித்துத் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் எடுத்துரைத்தனர்.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 20.05.2025 வெளியிடப்பெற்றது.